பக்கங்கள் 22+3

# மாலை முரசு

## ஒட்டுமொத்த தமிழருக்காகவும் குரல் கொடுத்த குரு முதல்வர்!

### வடக்கு ஆளுநர் இரங்கல்



“மறைந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக

03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 19 வெள்ளிக்கிழமை 02.05.2025 | அதிர்வு 272

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# மறைந்த நல்லை ஆதீன முதல்வரின் புகழுடலுக்குப் பலரும் இன்று அஞ்சலி

02



### காணி கபளீகர வர்த்தமானியை வாபஸ் பெற

# அரசுக்கு மே 28 வரை சுமந்திரன் காலக்கெடு

## தவறினால் சாத்வீக வழி முறையில் சட்ட மறுப்புப் போர் ஆரம்பமாகும்



வடக்கில் தமிழ் மக்களின் கணிசமான காணிகளைக் கபளீகரம் செய்யும் விதத்தில் அரசு விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெறுவதற்கு அரசுக்கு இம்மாதம் 28ஆம் திகதி வரை காலக்கெடு விதித்திருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், அரசு இந்த விடயத்தில் வர்த்தமானியை வாபஸ் பெறத் தவறுமானால் அந்தத் திகதிக்குப் பின்னர் தமிழ்க் கட்சிகள் யாவற்றையும் இணைத்துக் கொண்டு அரசுக்கு எதிராக சாத்வீக வழிமுறையில் சட்ட மறுப்புப் போராட்டம் ஒன்று ஆரம்பம் ஆகும் என்று அறிவித்திருக்கின்றார்.

03

# மறைந்த நல்லை ஆதீன முதல்வரின் புகழுடலுக்குப் பலரும் இன்று அஞ்சலி

(எஸ்.நிதர்ஷன்)

இறையடி சேர்ந்த நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் புகழுடலுக்குப் பலரும் நல்லை ஆதீனத்தில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

கொழும்பில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில் நல்லை ஆதீனகுரு முதல்வர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று இரவு இறையடி சேர்ந்தார்.

குரு முதல்வரின் புகழுடல் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்துக்கு இன்று மதியம் கொண்டு வரப்பட்டது.

புகழுடலுக்கு மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இறுதிக்கிரியை நிகழ்வு இன்று மாலை நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.














# தேசிய மக்கள் சக்தியின் யாழ். மேயர் வேட்பாளர் உறுப்பினராகக் கூடப் பதவி வகிக்க முடியாதாம்!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் விளக்கம்





(பிரபாகரன் டிலக்சன்)

”தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வேட்பாளர் சுந்தரமூர்த்தி கபிலன் மாநகர சபை மேயராக அல்ல, யாழ். மாநகர சபையின் உறுப்பினராகக் கூடப் பதவி வகிக்க முடியாது. அவர் உறுப்பினராக வந்தாலே வழக்குத் தொடர்ந்து அவரை வெளியேற்றுவோம்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தனியார் ஊடகம் ஒன்றின் நேர்காணல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ். மாநகர சபையின் எல்லைக்குள் வசிக்காத தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகர சபை மேயர் வேட்பாளர் சுந்தரமூர்த்தி கபிலன் மாநகர சபை மேயராக அல்ல, யாழ். மாநகர சபையின் உறுப்பினராகக் கூடப் பதவி வகிக்க முடியாது. அவர் உறுப்பினராக வந்தால் வழக்குத் தொடர்ந்து அவரை வெளியேற்றுவோம்.” – என்றார்.

# யானை தாக்கி விவசாயி சாவு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வவுணதீவு, பாலைக்காடு வயல் பிரதேசத்தில் வேளாண்மைக்கு நீர் பாய்ச்சச் சென்ற விவசாயி ஒருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

நாவற்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய வைரமுத்து மகாலிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி விவசாயி வழமை போல் வேளாண்மைக்கு நீர் பாய்ச்சுவதற்காக நேற்று இரவு சென்றவர் இன்று காலை வரையில் வீடு திரும்பி வராத நிலையில் உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றபோது அவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

பின்னர் இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு



பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அரசுக்கு...

”மார்ச் 28ஆம் திகதியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவித்தல் இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் அம்பலமாகியுள்ளது. இதனை அரசு கை வாங்குவதற்கு ஒரு மாத காலக்கெடு – மே 28 வரை – வழங்குகின்றோம். அந்தத் திகதிக்குள் இந்த வர்த்தமானியை அரசு கை வாங்காமல் விட்டால், ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் தமிழ்ப் பொதுமக்களை இணைத்துக்கொண்டு அந்த வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக சாத்வீக முறையில் பெரும் சட்ட மறுப்புப் போராட்டம் ஒன்றே முன்னெடுப்போம்.” – என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

“இது தனித்து தமிழரசுக் கட்சி முன்னெடுக்கப் போகின்ற போராட்டம் அல்ல. ஒட்டுமொத்த முழுத் தமிழினமும், தமிழ்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து எடுக்கப் போகின்ற போராட்டம். மூத்த – முன்னணி – தமிழ்க் கட்சி என்ற முறையில் இந்த அறிவிப்பை அதன் பதில் பொதுச்செயலாளராக நான் அறிவித்திருக்கின்றேன்.

தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்கான போராட்ட எழுச்சியை, தங்கள் நிலங்களைக் காப்பதற்காக முன்னெடுக்க வேண்டிய ஒரு தேவை வந்துள்ளது. தமிழினத்தின் கருத்தை இந்தப் போராட்டம் மூலம் முழு உலகக்கும் நாம் முன் வைப்போம்.” – என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

---

### ஒட்டுமொத்த...

ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சமயத் தலைவராக இருந்தபோதும் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்காகவும் குரல் கொடுத்து வந்த ஒருவர். அவர் ஆற்றிய பணிகளுக்காக என்றும் எம் மக்களால் நினைவுகூரப்படுவார்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“இந்து சமயத்துக்காகப் பல தசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இறைவனடி சேர்ந்தமையறிந்து கவலையடைகின்றேன்.

இந்து சமயத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த அவரை மிக நீண்டகாலமாக நான் அறிவேன். நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனம் ஊடாக இந்து சமயத்தை வளர்ப்பதற்காகப் பல நிகழ்வுகளை நடத்தி வந்திருக்கின்றார். அவற்றுக்கு மேலாக சிறுவர்களிடத்தே இந்து சமயத்தின் மீதான ஈர்ப்பை அதிகரிக்கவும், இந்து சமய அறநெறிகளைப் போதிக்கவும் பல விடயங்களை அவர் முன்னெடுத்திருந்தார் என்பது மிக முக்கியமானது.

இதற்கும் மேலதிகமாக, போர்க் காலத்திலும் சரி அதற்குப் பின்னரான காலங்களிலும் சரி, யாழ்ப்பாணத்தை நோக்கி வருகின்ற இராஜதந்திரிகள், அரசியல்வாதிகள் என்று அவரைச் சந்திக்காமல் எவரும் செல்வதில்லை. எமது மக்களின் உண்மை நிலையை எடுத்துக்கூறுவதற்கு அவர் என்றும் பின்நின்றதில்லை. சமயத் தலைவராக இருந்தபோதும் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்காகவும் குரல் கொடுத்துவந்த ஒருவர்.

அவர் ஆற்றிய பணிகளுக்காக என்றும் எம் மக்களால் நினைவுகூரப்படுவார்.

அவருக்கு வடக்கு மாகாண மக்கள் சார்பாக ஆத்ம வணக்கங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.” – என்றுள்ளது.

## வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின்

# அரசியல் அபிலாஷைகளுக்கு சமாதி கட்டப்படும் அபாயம்!

## ஈ.பி.டி.பி. ஸ்ரீகாந்த் எச்சரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சி மன்றங்கள் வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தியிடம் செல்லுமாயின் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்குச் சமாதி கட்டப்படும் அபாயம் இருக்கின்றது என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

“வடக்கு மாகாணத்தில் ஆயிரக் கணக்கான காணிகளை அபகரிப்பதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டு இருக்கின்றமை தொடர்பான தகவல்களை ஊடகங்கள் வெளிப்படுத்தி இருக்கின்றன.

குறிப்பாக உரிமை கோரப்படாத காணிகளைச் சுவீகரிப்பதற்கான காலக்கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றோம். இவ்வாறான விடயங்கள் தொடர்பாக மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதாவது, இவ்வாறான விடயங்களில் அரசியல் தலைமைகள் என்பதற்கு அப்பால் தென்னிலங்கையில் இருக்கின்ற அரச உயர் அதிகாரிகள் மற்றும் அரச திணைக்களங்கள், ஒரு நிகழ்ச்சி நிரலுடன் செயற்பட்டு வருகின்றமையை கடந்த காலங்களில் நாம் அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டிருக்கின்றோம்.

குறிப்பாக சொல்ல வேண்டுமாக இருந்தால், கடந்த ஆட்சிக் காலத்தில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வனவளத் திணைக்களம், வனஜீராசிகள் திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்களம் போன்றவற்றினால் கையகப்படுத்தப்பட்டுள்ள எமது மக்களின் குடியிருப்புக்கள் மற்றும் விசாய நிலங்களை விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோது, சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தென்னிலங்கையின் உயர் அதிகாரிகளினால், சுற்றுநிருபங்கள், சட்டங்கள் போன்றவற்றின் பெயரால், தொடர்ச்சியாக சாக்குப்போக்குகள் தெரிவிக்கப்பட்டு வந்தன. இதனால் துறைசார் அமைச்சர்களுடன் கலந்துரையாடி, அமைச்சரவைக்கு இணைந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு கொள்கையளவு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கையகப்படுத்தப்பட்ட காணிகள் அனைத்தையும் விடுவிக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியினாலேயே அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தாலும் அங்கே இருக்கக்கூடிய அரச உயர் அதிகாரிகள் காணிகளை விடுவிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய அலுவலக நடவடிக்கைகளைச் சீராக முன்னெடுக்காமல் திட்டமிட்ட காலதாமதத்தை மேற்கொண்டு வந்திருந்தனர். அவர்கள் சரியாகச் செயற்பட்டிருந்தால் கடந்த ஆட்சிக் காலத்திலேயே ஆயிரக்கணக்கான காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கும்.

அதுமாத்திரமல்லால், விடுவிக்கத் தீர்மானித்த காணிகளுக்குப் பதிலாக எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற அரச காணிகளைச் சுவீகரிப்பதற்கான தயார்ப்படுத்தல்களையும் முன்னடுத்திருந்தனர்.

இந்த விடயத்தை அறிந்து கொண்ட எமது செயலாளர் நாயகம், ஜனாதிபதியுடன் கலந்துரையாடி அதனைத் தடுத்து நிறுத்தியிருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே தற்போது இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

துரதிஷ்டவசமாக இவ்வாறான விடயங்களை எமது மக்கள் நலன்சார்ந்து – எமது மக்களின் இருப்பைப் பாதுகாத்து வலுப்படுத்தும் நோக்கில் கையாளக்கூடியவர்கள் யாரும் தற்போதைய ஆளும் தரப்பில் இல்லாத சூழ்நிலையே காணப்படுகின்றது.

மாற்றத்தை எதிர்பார்த்து எமது மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் கூட ஏமாற்றம் அளிக்கும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக இந்தக் காணி அபகரிப்பு தொடர்பான செய்தியை வெளியே கொண்டு வந்த ஊடகவியலாளரை அச்சுறுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவனின் முகப் புத்தக பதிவு அமைந்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அதேபோன்று ஊடக விவாதத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், வர்த்தமானியின் உண்மைத்தன்மையை நிரூபிக்குமாறு சிறுபிள்ளைத்தனமாகக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

இவற்றைப் பாரக்கும்போது, எமது மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் எமது மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

ஆக, அரசியல் அபிலாஷைகளுக்காகப் போராடிய இனம், இந்த மண்ணிலே இப்போது ஓர் ஆபத்தான சூழலை எதிர்கொண்டிருக்கின்றது.

இந்த இடத்திலே எமது பிரதேசங்களில் இருக்கின்ற எமது அரச அதிகாரிகளிடம் உரிமையுடன் விநயமான வேண்டுகோளை முன்வைக்கின்றோம்.

தயவு செய்து, உங்களுடைய தொழில் சார் கடமைகள், தொழில்சார் கடப்பாடுகள், பதவி உயர்வுகள் போன்றவற்றுக்கு அப்பால், சமூக சிந்தனையோடு உங்களின் செயற்பாடுகள் அமைய வேண்டும். நீங்களும் இந்த மண்ணிலேதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் பிள்ளைகளும் இந்த மண்ணிலேதான் வாழ வேண்டும்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பார்கள். இந்த மண்ணிலே எமது தனித்துவங்களும் அடையாளங்களும் பாதுகாக்கப்பட்டாலதான் எதிர்காலத்திலும் நாம் கௌரமாக வாழ முடியும்.

எனவே, எமது இருப்பினையும் அடையாளங்களையும் பாதிக்கும் வகையிலான சுற்றுநிரூபங்கள் அறிவுறுத்தல்கள் போன்றவை உங்களுக்குக் கிடைக்குமாயின் அவை தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். அல்லது எமது மக்கள் சார்ந்த செயற்பாட்டாளர்களின் கவனத்துக்கு அவற்றைக் கொண்டு வருவதன் மூலம், எமது மக்களை பாதுகாப்பதற்கான உங்களின் தார்மீக கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதியாக மக்களுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க விரும்புகின்றோம். இந்த அரசின் காலப் பகுதியிலும் எமது மக்களின் தாயகச் சிந்தாந்ததை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகள் சூட்சுமமாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதை இந்தக் காணி அபகரிப்பு வெளிப்படுத்தி இருக்கின்றது.

இந்தச் சூழலில் நடைபறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறுமாக இருந்தால், உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படுகின்றவர்களும், தற்போதைய 3 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் போன்று, கையாலாகாதவர்களாக, தென்னிலங்கையின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்து ஓடுகின்ற வர்களாகவே இருப்பார்கள்.

உள்ளூராட்சி சபைகளின் சம்மதத்துடன் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குச் சமாதி கட்டப்படும் அபாயம் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டு எதிர்வரும் 6 ஆம் திகதி வாக்குகளை அளிக்க வேணடும்” – என்றார்.

# காணி கபளீகரம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த சுமந்திரன் தலைமையில் இலவச சட்ட ஆலோசனை!

(எஸ்.ரகுதீஸ்)

வடக்கில் ஐயாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது ஏக்கர் காணி கபளீகரம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தும் முகமாக இலவச சட்ட ஆலோசனை வழங்கும் நிகழ்வு வடமராட்சி கிழக்கு – வெற்றிலைக்கேணியில் இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் உள்ளிட்ட பத்து வரையான சட்டத்தரணிகள் கலந்துகொண்டு மக்களுக்கான ஆலோசனைகளை வழங்கினார்கள்.









# நல்லை ஆதீன சுவாமிக்கு இன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் அஞ்சலி

(வடமராட்சி நிருபர்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இறையடி சேர்ந்துள்ள நிலையில், அவரது நினைவஞ்சலி நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

இறைபதமடைந்த நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள், தெரிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அவரது ஆத்மா சாந்திக்கும் பிரார்த்திக் கப்பட்டது.

# நல்லை ஆதீனத்தின் மறைவு இந்து மதத்துக்குப் பேரிழப்பாகும்

## சர்வதேச இந்துமத பீடம் அனுதாபம்



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் மறைவு பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது மறைவு இந்து மதத்துக்குப் பேரிழப்பாகும்.

சர்வதேச இந்துமத பீடச் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா வெளியிட்டுள்ள அனுதாபத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

மிகுந்த சாதுவானவர், தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவ்வப் போது தன்னால் இயன்ற அளவு குரல் கொடுத்தவர். இந்து மதத்துக்கு ஒரு பெருமை வாய்ந்த ஆன்மீக தலைவராக செய்யற்பட்டவர்.

நாவலர் 200 ஆவது நூற்றாண்டை கொண்டாடுவதற்கு முன்னாள் பிரதமரும் புத்த சாசன மத மற்றும் கலாச்சார அமைச்சராக இருந்த மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் நாவலர் 200 ஆவது நூற்றாண்டை பிரகடானப்படுத்திய போது தலைமை வகித்தவர். அத்துடன் திருவாவடுதுறை ஆதீனம் நல்லூருக்கு விஜயம் செய்த போது இவரது தலைமையில் அவருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டிருந்தது.

நல்லூர் முருகன் ஆலய தேர் திருவிழா உற்சவத்தை நல்லை ஆதீனமும் அவர்களுடன் நான் பங்குபற்றியிருந்த நினைவுகளும் என் மனதில் இன்றும் நிலைத்துள்ளது. அத்தகைய நல்லதொரு ஆன்மீக தலைவரை இழந்தது இந்து மத மக்களுக்கு வேதனைக்கு உள்ளாகியுள்ளது.

அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய சிதம்பரம் தில்லை வாழ் சிவ நடராஜ பெருமானை மனதாரப் பிரார்த்தனை செய்து அவரது ஆன்மா ஈடேற்றத்துக்கு அனைவரும் பிராத்திப் போம்.– என்றுள்ளது.

# நல்லை ஆதீனத்தின் மறைவை முன்னிட்டு துக்கதினத்தை ஜனாதிபதி அறிவிக்க வேண்டும்

## இந்து மத பீடம் வேண்டுகோள் விடுப்பு

இலங்கையின் இந்து மத ஆன்மீகத் தலைவரான ஆதீன குரு முதல்வரின் மறைவை முன்னிட்டு வடபகுதியில் ஒரு நாளைத் துக்க தினமாக அனுஷ்டிக்க இலங்கை அரசு ஆவண செய்ய வேண்டும் என்று சர்வதேச இந்த மாத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா இந்து மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவர் வடக்கு பகுதியில் இக்கட்டான சூழ்நிலையிலும் தனது ஆன்மீக செயலபாடுகளை தமிழ் மக்களின் மத்தியில் முன்னெடுத்து வந்தவர். அதேவேளை தமிழ் மக்களின் இன்னல்களையும் அவ்வப்போது அரசுக்கு தெளிவு படுத்தியவர்.

இத்தகைய பெரும் ஆன்மீக தலைவருக்கு துக்க தினம் ஒன்றை அரசு அறிவிப்பதன் மூலம் இலங்கை வாழ் அனைத்து இந்து மக்களுக்கும் இது ஒரு கௌரவமாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது என்று பாபு சர்மா மேலும் தெரிவித்துள்ளார் .



# அனைவரையும் அன்புடன் வரவேற்று அரவணைத்து வழிகாட்டிடும் ஓர் மகா புருஷர் நல்லைக் குருமணி

## பிரார்த்தனைச் செய்தி இந்துக் குருமார் அமைப்பு தெரிவிப்பு



பூரணமடைந்த எமது யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அனைவரையும் அன்புடன் வரவேற்று அரவணைத்து வழிகாட்டிடும் ஓர் மகா புருஷராக விளங்கினார்கள்.

– இவ்வாறு அவரை அஞ்சலித்து, அவரது சிவசாயுச்சியத்திற்கு பிரார்த்திப்போம் எனத் தெரிவித்து இந்துக் குருமார் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவாகமகலாநிதி சிவஸ்ரீ கு.வை. க.வைத்தீஸ்வர குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ ச.சாந்தரூபக் குருக்கள் ஆகியோர் இவ்விடயம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

எமது யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் பூரணமடைந்த செய்தி சைவ மக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்தியா மதுரை ஆதீன திருமடத்தின் தொடர்புடன் 1966 ஆம் ஆண்டு ஆரம்பித்து, சமயத்திற்காகவும் சமூகத்திற்காகவும் குரல் கொடுத்து பல்வேறு நற்பணிகள் ஆற்றிவந்துள்ள ஆதீனமாகும். முதலாவது ஆதீன கர்த்தராக ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளின் (மணிஐயரவர்கள்) விளங்கினார்கள்.

நல்லை ஆதீன இரண்டாவது குருமகா சன்னிதானமாக ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் விளங்கினார்கள். அமைதியான சுபாவமுடையவராக அனைவரையும் அன்புடன் வரவேற்று அரவணைத்து வழிகாட்டிடும் ஓர் மகா புருஷராக விளங்கினார்கள். இச்சமயத்தில் சைவ மக்களாகிய நாமெல்லோரும் சுவாமிகள் திருவடி பணிந்தவர்களாக சிவசாயுச்சியத்திற்கு அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்வோம். – என்றுள்ளது.





# சைவம் காக்கும் தூண் சரிந்தது தருமை ஆதீன குருமணி துயரம்

உலகெங்கும் சைவத்தைக் கொண்டு சென்ற இலங்கை யாழ்பாணம் நல்லை ஆதீனம் இறையடியில் சேர்ந்தது சைவசமயத்திக்கு பேரிழப்பாகும்.

நல்லைக் குருமகாசந்நிதானத்தின் மறைவையொட்டி இந்தியா, தர்மபுரம், தருமை ஆதீன 27 ஆவது நட்சத்திர குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வெளியிட்ட இறை பிரார்த்தனை செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

யாழ்பாணத்தில் சைவத்தை வளர்க்க மதுரை ஆதீனம் 291ஆவது மகாசந்நிதானம் அவர்களால் தோற்றுவிக்கப் பெற்று தம்முடைய கதாகலேஷத்தால் சமயத்தை புராணத்தை மாதகணக்கில் சொற்பொழிவாற்றிய சாமிநாத சுவாமிகளுக்குப் பின் 2ஆம் பட்டமாக தருமையாதீனத்தில் முறையாக காஷாயம், தீட்சைகள் பெற்று, ஈழத்தமிழர் வாழும் தேசந்தோறும் பலமாநாடு நிகழ்வுகளில் பங்கேற்று, சமயம் பரப்பியவர்.

நாம் மாவிட்டபுரம் கும்பாபிஷேகம் தரிசிக்க சென்றபோது கூட சித்தாந்த மாநாட்டிற்கு அழைப்பு விட்டோம். அதன் போது இங்க. தங்கி மருத்துவம் பார்க்கலாம் என்றோம். வரேன் என்று கூறி மகிழ்ந்தவர், மாநாடு தொடக்கத்தில் முதல்நாள் பரிபூர்ணம் எய்தியமை தாங்முடியாது துயறுருகின்றோம். சைவம் காக்கும் தூண் சரிந்தது. தக்கவர்கள் அம்மடத்தின்னின்று சமயத்தை காக்க செந்தமிழ் சொக்கன் திருவருளை சிந்திக்கின்றோம். – என்று உள்ளது.

# உலகெல்லாம் பரந்து வாழும் தமிழர்களுக்கு நல்லை ஆதீனத்தின் இழப்பு பேரிழப்பாகும்

### வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இரங்கல்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வரது இழப்பு என்பது இலங்கையில் உள்ள சைவத் தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகெல்லாம் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கான பேரிழப்பென இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இறையடி சேர்ந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வரது மறைவு தொடர்பில் சி.வி.கே.சிவஞானம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நேற்று இரவு இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி சைவ தமிழ் மக்களுக்கு அதிர்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது.

இரண்டாவது சந்நிதானமாக நல்லை ஆதீனத்தை இதுவரை நிர்வகித்தவர். எல்லா மக்களோடும் குறிப்பாக ஏனைய மத தலைவர்களுடனும் மிக ஆரோக்கியமான உறவுகளை கொண்ட சைவ சமய தலைவராக திகழ்ந்தவர். மக்களோடு மக்களாக வாழ்ந்தவர்.

எல்லா ஆலயங்களுக்கும் அவ்வப்போது அவர்களது திருவிழா காலங்களில் அழைத்த போதெல்லாம் தயங்காமல் சென்று பங்கேற்று ஆசீர்வதித்தவர்.

இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது ஆதீனம் என்ற பெருமை பெற்ற நல்லை ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம் என்ற பெருமை இவருக்குண்டு. தனது வாழ்க்கையில் எளிமையாக வாழ்ந்த பெருந்தகை.

தான் இறந்தால் தனது உடல் எளிமயாக தகனம் செய்யப்பட வேண்டும் என்று கூறிய மனப்பாங்கு ஆச்சரியமானதும் பெருமைக்குரியதும் ஆகும்.

தமிழ் மக்களுடைய இருப்பு மற்றும் சுயநிர்ணயம் தொடர்பான பிரச்சினைகளை எந்த வித தயக்கமுமின்றி தன்னை சந்திக்க வருகின்ற எல்லா



தென்னிலங்கை தலைவர்களிடமும் சர்வதேச பிரதிநிதிகளிடமும் தெளிவாக எடுத்துக் கூறிய பெருந்தகையாகவும் பெரும் மதத் தலைவராகவும் இவர் விளங்கினார்.

இவரது இழப்பு என்பது இலங்கையில் உள்ள சைவத் தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகெல்லாம் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கான இழப்பாகும். அன்னாருடைய ஆன்மா இறைவனோடு இணைந்து பாராதவிந்தத்தில் அமைதி கொள்ள பிரார்த்திக்கிறேன்.- என்றுள்ளது.



# நல்லை ஆதீனத்தின் மறைறை அடுத்து மஸ்கெலியா இந்து மா மன்றம் இரங்கல்

நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இறையடி சேர்ந்ததையிட்டு மஸ்கெலியா இந்து மா மன்றம் இரங்கல் தெரிவித்துள்ளது.

மன்றச் செயலாளர் செட்டியாபிள்ளை திருக்கோணபெருமாள் மற்றும் அதன் தலைவர் உட்பட உறுப்பினர்கள், நாவலப்பிட்டி இந்து மன்ற தலைவர் ஆர்.ராஜேந்திரன் மற்றும் அதன் உறுப்பினர்கள் தங்களின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

அவர்களது இரங்கலில், இலங்கையில் பல தசாப்தங்களாகச் சைவ சமயத்துக்கும் சமாதானத்துக்கும் தொண்டாற்றி வந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்தர் பரமாச்சாரிய சுவாமிகளது மறைவை அடுத்து அதிர்ச்சி அடைந்துள்ளோம்.

இலங்கை வாழ் மக்களுக்கும் உலக வாழ் சைவர்களும் இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்தனை செய்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புதுடில்லிக்குப் புரியுமா?

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பரஸ்பர உறவு தொடர்பில் ஒரு விடயத்தை இப்பத்தியில் தொடர்ந்து சுட்டிக் காட்டி வருகிறோம். அது - பாரதம் இலங்கையில் தனது உண்மையான நண்பர்கள் யார், கபடமான வேடதாரி எதிரிகள் யார் என்பதை அடையாளம் காண்பதில் தொடர்ந்து தவறு இழைத்து வருகின்றது என்பதுதான்.

ஆரம்பத்தில் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்திற்கு தூண்டுகோலாகவும் கொழுகொம்பாகவும் இருந்த இந்தியா, பின்னர் சிங்களத்தோடு தோழமைக் கொண்டு, தமிழரின் உரிமைப் போராட்டத்தை அழிக்கக் கங்கணம் கட்டிச் செயல்பட்டது. அதன் விளைவுகளை பாரதமும் இப்போது எதிர்கொள்கிறது.

இலங்கையையும் இந்தியாவையும் தரைப் பாதையில் இணைப்பதற்கான திட்டத்தை இந்தியா முன்னின்று பிரேரிக்கின்றது. முன்னைய இலங்கை அரசுகள் அதற்குச் சாதகமான பிரதிபலிப்பைக் காட்டின. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசு அதனைத் திட்டவட்டமாக - அடியோடு - நிராகரித்து விட்டது என்று இப்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

நில இணைப்பு தொடர்பாக இந்தியாவுடனான கருத்து வேறுபாட்டிற்கான காரணத்தை விளக்கிய இலங்கையின் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத், நாட்டில் பிளவு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த கவலைகளுடன், பொருளாதார மற்றும் அரசியல் ஏற்றத்தாழ்வு இந்த முடிவுக்கு வழிவகுத்தது என்றார்.

தென்னிந்தியாவின் இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் வடமேற்கு மன்னாருக்கும் இடையில் ஒரு பாலம் அமைப்பதே இந்தியத் திட்டம். ஆனால், தற்போதைய இலங்கை அரசாங்கம் இரண்டு ஆசிய நாடுகளுக்கும் இடையே பாலம் கட்டும் திட்டத்தை நிராகரித்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் ஹேரத் கூறுகின்றார்.

“இந்தியாவும் இலங்கையும் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒரே மட்டத்தில் இருந்தால், எந்தப் பிரச்சினையும் இல்லை. உதாரணமாக, சிங்கப்பூர் மற்றும் மலேசியா - இரண்டும் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சமமானவை. அந்த நாடுகளுக்கு இடையே ஒரு பாலம் கொண்ட இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு குறித்து எந்தப் பிரச்சினையும் இல்லை.”

“ஆனால் நாங்கள் அவர்களிடமிருந்து (இந்தியாவிடமிருந்து) வேறுபட்டவர்கள். நாங்கள் ஒரு சிறிய நாடு. எங்கள் பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகள் இந்தியாவிலிருந்து வேறுபட்டவை. அந்த பின்னணியில், இது போன்ற ஒரு திட்டம் பொருத்தமானதல்ல, இந்த நேரத்தில் நாங்கள் அதற்குத் தயாராக இல்லை.”

பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் தேசிய பாதுகாப்பு கவலைகள் காரணமாக இந்தத் திட்டம் இலங்கையில் குறிப்பிடத்தக்க எதிர்ப்பைச் சந்தித்துள்ளது.

இலங்கையின் பௌத்த - சிங்கள மேலாதிக்க அரசின் இந்த சப்பைக் கட்டு காரணங்களுக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் சிந்தனைப் போக்கின் தாற்பரியம் புதுடில்லிக்குப் புரியுமோ, என்னவோ...!

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# கொத்மலை பிரதேச சபையை அமைக்க போவது சேவல்தான்!

## இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



(மஸ்கெலியா நிருபர்)

வரலாற்றை கூறி நான் உங்களிடம் வாக்கு கேட்கவில்லை. இது என் சொந்த ஊர். அந்த நம்பிக்கையில்தான் நான் உங்களிடம் வாக்கு கேட்கின்றேன். உங்களுக்கு எங்கள் மீது முழுமையான நம்பிக்கை இருந்தால் சேவல் சின்னத்துக்கு வாக்களியுங்கள்.

ஏனென்றால் கொத்மலை பிரதேச சபையை அமைக்க போவது சேவல் சின்னம் தான்.

கொத்மலை பிரதேச சபைக்கு உட்பட்ட தோட்ட பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிராசார கூட்டம், நாடாளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் எல்படை, றொட்சில்ட், தவலந்தன்ன, பூண்டுலோயா ஆகிய பகுதிகளில் இடம் பெற்றது.

இதன்போது தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

தொடர்ந்து மக்கள் மத்தியில் உரையாற்றுகையில்,

நான் ஆளும் கட்சி அல்லது எதிர் கட்சியைக் குறை சொல்லி அரசியல் செய்ய விரும்பவில்லை. என்னுடைய அபிப்பிராயம், அரசைப் பொறுத்த வரையில் நுவரெலியா மாவட்டத்துக்கு 2025 ஆம் ஆண்டு வரவு, செலவுத் திட்டத்தில் 92 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால் நாங்கள் கடந்த வருடம் 580 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்திருந்தோம். நுவரெலியா மாவட்டத்துக்கு நாங்கள் ஒதுக்கிய நிதியை விட 5 மடங்கு குறைவாகவே தற்போதைய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அவ்வாறு இருக்கும் போது அமைச்சியில் இருந்து நீங்கள் எந்த விதமான வேலை திட்டங்களையும் எதிர்பார்க்க முடியாது.

இன்று நாடாளுமன்றத்தில் சிலர் கூறுகின்றார்கள், 4 ஆயிரம் வீடுகள் கட்டுவதாகவும் 5 ஆயிரம் வீடுகள் கட்டுவதாகவும் வாக்குறுதிகளை வழங்குகின்றார்கள். ஆனால் வரவு, செலவு திட்டத்தைப் பாருங்கள் வெறுமனே 379 வீடுகள் மாத்திரமே கட்ட முடியும். மலையகம் முழுவதுமாகவே. எவ்வாறு 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் வீடுகள் கட்ட முடியும்?

நாங்கள் 2020 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும்போது எங்களுக்கு 3 அச்சுறுத்தல்கள் காணப்பட்டன. முதலாவது மறைந்த தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் மரணத் துக்குப் பின்னர் அதைச் சரி செய்ய எங்களுக்கு சில கால அவகாசம் தேவைப்பட்டது. அரசியல் ஒரு பக்கம் தொழில்சங்கம் ஒரு பக்கம்.

இரண்டாவது கொரோனா தொற்று நோய் அதோடு சேர்ந்து வந்தது. அடுத்ததாக பொருளாதாரச் சிக்கல். வேலை செய்வதற்கான சூழ்நிலை இல்லை. ஆனால் 2023 ஆம் ஆண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. அப்போதும் எங்கள் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டது. இருந்தாலும் கூட உங்களுக்கான தேவைகள் நடந்தன. வீடு திட்டம் அமுல் படுத்தப்பட்டது. காணி உரிமைப் பத்திரம் தொடர்பாக வேலைதிட்டம் நடைபெற்றது. இந்திய அரசு ஊடாக 19 ஆசிரியர்களை வரவழைத்து பல ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கினோம். குழந்தைகளுக்கு ஏற்ற 1197 சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு இலவச காலை உணவு திட்டம் வழங்கினோம்.

குறிப்பாக இவை அனைத்தையும் ஒரு வருட காலத்தில் செய்தும் கூட வேலை செய்யவில்லை என்கிறார்கள்.

மேலும் சம்பள உயர்வும் வழங்கினோம். அவ்வாறு இருக்கையில் புதிய அரசாங்கம் வந்து 8 மாத காலம் ஆகியும் கூட வெறும் 4 சட்டங்களே அமுல் படுத்தப்பட்டன. இதை நான் விமர்சிக்கவில்லை. மக்களுக்கு புரிய வேண்டும் என்ற ஆதங்கத்தில் பேசுகிறேன்.

கொத்மலை பிரதேச சபையை உருவாக்கியது நாங்கள் தான். ஆனால் தவிசாளரும் கிடையாது உப தவிசாளரும் கிடையாது. மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். அதனால்தான் இந்த முறை கொத்மலை பிரதேசத்தில் நாங்கள் சேவல் சின்னதில் தனித்துக் கேட்கின்றோம். கொத்மலை பிரதேசத்தை சேவல் சின்னம் இல்லாமல் உருவாக்க முடியாது. அப்படி இருக்கும் போது இந்த வாய்ப்பை நாம் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.- என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# தமிழ் தேசியப் பேரவையின் தேர்தல் அலுவலகம் திறப்பு

(எஸ். நிதர்ஷன்)

வேலணை பிரதேச சபைக்கான தமிழ் தேசிய பேரவையின் உள்ளூராட்சி அதிகார சபை தேர்தலுக்கான அலுவலகம் நேற்று நண்பகல் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய பேரவையின் அங்கத்துவக் கட்சியின் தலைவரும் ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பின் தலைவருமாகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வேலணை பிரதேச சபை வேட்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் சங்கானை வைத்தியசாலைக்கு உதவி

(வடமராட்சி நிருபர்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் ஆன்மீக அருளுரையை "ஈழத்தில் சைவம்" என்ற தலைப்பில், பொது சுகாதார பரிசோதகர் ஜெ.கோபிராஜா நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் சங்கானை பிரதேச வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, நரம்பியல் புனருத்தாபன பிரிவுக்கு உரிய பக்கவாத நோயாளிகளுக்கான சிகிச்சைக்கு, இயன் மருத்துவருக்கு வேதனம் வழங்குவதற்கு 70 ஆயிரம் ரூபா பங்குனி மாத நிதியாக வழங்கப்பட்டது.














# மன்னாரில் வழிபாடுகளுடன் மே தினம்!

(வாஸ் கூஞ்ஞ)

தொழிலார் தினத்தை முன்னிட்டு உலகம் முழுவதும் மக்கள் அரசியல் மற்றும் தொழில் சங்கங்கள் ரீதியாகவும் அத்துடன் மத வழிபாடுகள் ரீதியாகவும் இந்தத் தினத்தைக் கொண்டாடினர்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்த மட்டில் பல இடங்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் ஆகியோர் இணைந்த விளையாட்டுப் போட்டிகள் நடத்தி இந்தத் தினத்தை கொண்டாடினர்.

இதே நேரத்தில் கத்தோலிக்க மக்களின் திருஅவையானது உலகம் முழுவதும் தொழிலாளர்களின் பாதுகாவலராம் புனித சூசையப்பரின் தினமாகக் கொண்டாடி வருவதால் மன்னார் மறை மாவட்டத்தில் இத்தினத்தை மத வழிபாடுகளுடனும் விளையாட்டுப் போட்டிகளுடனும் மிக விமரிசையாக கொண்டாடியுள்ளனர்.

மன்னாரில் கடற்கரைகளை அண்டி வாழும் கிராம மக்கள் காலையில் திருப்பலிகளில் கலந்து கொண்டபின் புனித சூசையப்பர் திருச்சுரூபத்தை படகில் ஏற்றி கடலில் வலம் வந்து கடலை ஆசீர் வதிக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதைத் தொடர்ந்து கத்தோலிக்க திருஅவை 2025 ஆம் ஆண்டை யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்துயள்ளதால் இதை முன்னிட்டும் தொழிலாளர் தினத்தை முன்னிட்டும் குறிப்பிட்டத் தினங்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தும் நோக்குடன், விளையாட்டுப் போட்டிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.







# ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மே தின நிகழ்வு

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மே தின நிகழ்வு அதன் பொதுச் செயலாளர் ஜீவன் இராஜேந்திரன் தலைமையில் நேற்று (01) கொட்டகலை மேபீல்ட் சாமஸ் தோட்டத்தில் நடைபெற்றது.





# மரம் முறிந்து வீழ்ந்ததில் வீடுகளுக்குச் சேதம்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கனமழையுடன் கூடிய பலத்த காற்றால் மரங்கள் முறிந்து வீழ்ந்ததில், தம்பலகாமம் பகுதியில் வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் தம்பலகாமம் கிராம சேவகர் பிரிவே இவ்வாறு அனர்த்தத்துக்கு இலக்காகியுள்ளது.

இதன் காரணமாக தென்னை மரம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்ததில் வீட்டுக் கூரை உள்ளிட்ட வீட்டு உபகரணங்களும் சேதமடைந்துள்ளன என்று வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கனமழை காரணமாக வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் அன்றாட வாழ்வாதார நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.






# கல்முனை சந்தாங்கேணி நீச்சல் தடாகம்: மாநகர சபை அதிகாரிகளிடம் கையளிப்பு!

## விரைவில் மக்களின் பாவனைக்கும் ஏற்பாடு

(எம்.எஸ்.எம்.ஸாகிர், நூருல் ஹுதா உமர்)

கல்முனை சந்தாங்கேணி நீச்சல் தடாகத்துக்கான வேலைத் திட்டங்களை ஆதம்பாவா எம்.பி. துரிதகதியில் மேற்கொண்டு, உத்தியோக பூர்வமாக கல்முனை மாநகரசபை அதிகாரிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (30) புதன்கிழமை இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் விளையாட்டு அமைச்சால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மந்த கதியில் நிர்மாணிக்கப்பட்டுவந்த கல்முனை சந்தாங்கேணி நீச்சல் தடாகத்தின் வேலைத் திட்டத்தை விரைவாகப் பூரணப்படுத்தி, பொது மக்களின் பாவனைக்கு கொண்டு வரும் முகமாக விளையாட்டுத்துறை அமைச்சருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளரை நேரடியாக அழைத்து வந்து, எடுத்த முயற்சிகள் காரணமாகவும், சில இயந்திரங்களைக் இயங்கு நிலைக்கு கொண்டு வந்தும் மற்றும் நீச்சல் தடாகத்துக்கு மின்சாரம் பெற்றுக் கொடுத்தும் வேலைத்திட்டங்களை துரிதப்படுத்தி, பாவனைக்கு வரும் வகையிலான ஏற்பாடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா செய்திருந்தார்.



நாடாளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா உட்பட மாநகர ஆணையாளர், பொறியாளர் மற்றும் ஊழியர்கள் உட்பட்ட அதிகாரிகள் அனைவரினதும் பங்குபற்றுதலுடன் இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் மற்றும் உயர் அதிகாரிகள் முன்னிலையில், கல்முனை மாநகர ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சால் 2025 வரவு – செலவு திட்டத்தின் போது கல்முனை சந்தாங்கேணி மைதான விளையாட்டரங்குக்கு அபிவிருத்திக்கு 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த நீச்சல் தடாகமானது விளையாட்டுத்துறை அமைச்சரின் பங்குபற்றுதலுடன் எதிர்வரும் ஓரிரு வாரங்களில் பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நீச்சல் தடாகத்துக்குப் பாதுகாப்பு அதிகாரி மற்றும் பயிற்றுனர்கள் நியமிக்கப்படுவதோடு, முறையாக நீந்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இங்கு ஒரு மாத, இரு மாத, மூன்று மாத காலம் பயிற்சி பெற்ற அதிகாரிகளால் நீச்சல் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. எமது பிரதேசத்தில் எதிர்காலத்தில் தேசிய, சர்வதேச ரீதியில் நீச்சல் வீரர்களை உருவாக்குவதற்கும் இது சாதகமான நிலையை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. பாடசாலை மாணவர்களுக்கும் நீச்சல் பயிற்சி வழங்குவதற்கும் இந்த நீச்சல் தடாகம் எதிர்காலத்தில்பயன்படுத்தப்படவுள்ளது. மாநகர சபைக்கு வருமானத்தை ஈட்டித் தரும் வகையிலும் பயன்படுத்தப்படவுள்ளது.



# இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு எம்.பி. மன்னாருக்கு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இந்தியாவின் தமிழ்நாடு திருவள்ளூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான காசிநாத் செந்தில் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

சிவில் சமூக செயல்பட்டாளர் ஒருவரின் ஏற்பாட்டில் பல்வேறு பொது அமைப்புக்கள், மீனவப் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடி வருகிறார்.

இந்த நிலையில் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளாரை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.








# 60 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது கார்!

(மஸ்கெலியா )

ஹட்டனில் இருந்து டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு பணியாற்ற சென்ற தாதியர் செலுத்தி சென்ற கார் ஒன்று வீதியை விட்டு விலகி 60 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக் குள்ளானது.

இதனால் காரைச் செலுத்திச் சென்ற தாதி படுகாயமடைந்த நிலையில் டிக் கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம், ஹட்டன் – நோர்வூட் பிரதான வீதியில் கெந்தகொள்ளை பகுதியில் இடம்பெற் றுள்ளது. முன்னால் பயணித்த பஸ்ஸை முந்திச் செல்ல முட்பட்ட வேலையில் எதிராக பாரவூர்தி வந்துள்ளது. இதனால் தாதி செலுத்தி சென்ற கார் பள்ளத்தில் பாய்ந்துள்ளது என்று ஹட்டன் பொலி ஸார் தெரிவித்தனர்.



# விசேட திறனுள்ள மாணவருக்கு திறன் அபிவிருத்திப் பயிற்சிகள்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விசேட திறனுள்ள பாடசாலை மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன் தலை மையில் திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மாற்றுத் திறனாளி மாணவர்களை எதிர்காலத் தில் நிலையான தொழில் வாய்ப்புக்குள் உட்படுத்துவதற்குத் தேவையான திறன்களை படிமுறை படி முறையாக அபிவிருத்தி செய்தல் இதன் முக்கிய நோக்கமாகும்.



மாணவர்களின் நேர முகாமைத் துவம், குழு செயற்பாடு, தலைமைத்துவம் போன்ற திறன்களை எவ்வாறு வளர்த் துக்கொள்ள வேண்டும் என்பது தொடர் பாக இதன்போது கலந்துரையாடப்பட் டது.

இதன்போது திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. கௌரிசாந் மற்றும் விதாதா உத்தி யோகத்தர்களும் கலந்து கொண்ட னர்.

# சகோதரிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம்!

தியாகராஜர் கலைக் கோவில் இயக்குநர் நாட்டிய கலைமணி பவானி குகப்பிரியாவின் மாணவிகளும் திரு. திருமதி சிவகுமார் தம்பதியினரின் புதல்விகளும், திரு. திருமதி சுந்தரலிங்கம் தெய்வமமாலினி, காலம்சென்ற பென்னையா மற்றும் கனகம்மாவின் பேத்தியுமான செல்வி. சஷ்மிகா, செல்வி. ருக்ஷிகா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை, மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசிய சர்வதேச பாடசாலை அதிபர் ஹர்ஷன டி. பெரெரா பிரதம அதிதியாகவும், கொழும்பு-12,ஹமீட் அல் குசைனியா கல்லூரி அதிபர் எம். ஆர். எம். ரிக் ஷ சிறப்பு அதிதியாகவும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொளவர்.

அணிசேர் கலைஞர்களாக நட்டுவாங்கம் – பவானி குகப்பிரியா, வாய்ப்பாட்டு – தாரணி ராஜ் குமார், மிருதங்கம் – சண்முகலிங்கம் நாகராஜன், வயலின் – ஈ. நிரோஜன், புல்லாங்குழல் – சிவ ஞானசுந்தரம் யூட், தாள தரங்கம் – ரட்ணம் ரட்ணதுரை.










# மழையால் வெள்ளத்தில் மூழ்கிய வயல் நிலங்கள்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம்,கிண்ணியா பிரதேச செயலகப் பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் நேற்று முன்தினம் (30) பெய்த கனமழையால் நீரில் மூழ்கியுள்ளன.

தம்பலகாமம் கோயிலடி பகுதியை அண்டிய வயல் நிலங் களும் கிண்ணியா சூரங்கல் பகுதியை அண்டிய பல ஏக்கர் வயல் நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

தற்போது நிலத்தை பதப்படுத்தி நெற் செய்கைக்காக விதைத்து ஓரிரு நாள்களிலேயே கனமழை பெய்துள்ளது. இதன் காரணமாக வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் நெல் மணிகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் அதிக வெள்ளம் வந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கல்முனை கர்மேல் பத்திமா கல்லூரியிலிருந்து பல்கலைக்குத் தெரிவாகும் மாணவர் கௌரவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் வெளியான உயர்தர (2024) பரீட்சை பெறுபெறுகளின் அடிப் படையில் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் இருந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்படவுள்ள மாணவர்களைப் பாராட்டிக் கௌர விக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் அருட்சகோ. ச. இ. ரெஜினோல்ட் தலை மையில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் பல்கலைக்கழ கத்துக்குத் தெரிவு செய்யப்படவுள்ள மாணவர்களை, மாணவத் தலைவர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர்.

அதிபர், பிரதி அதிபர்கள், உப அதி பர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து மாணவர் களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இந்த மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக நின்று உழைத்த ஆசிரியர்கள் அனைவருக்கும் மன மார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு ஆசிரியர்களோடு இணைந்து செயற் பட்ட பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.




# சொந்த மக்களுக்கே கதவடைத்து தவிக்கவிடும் பாகிஸ்தான் அரசு

இந்தியாவையும், பாகிஸ்தானையும் வீதி மார்க்கமாக இணைக்கும் அட்டாரி - வாகா எல்லையை பாகிஸ்தான் மூடியதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால், இந்தியாவில் இருந்து தங்கள் சொந்த நாட்டுக்கே செல்ல முடியாமல் பாகிஸ்தானியர்கள் தவித்து வருகின்றனர்.

இந்தியாவில் இருந்து தாய்நாடு திரும்பி வரும் பாக்ஸ்தான் மக்கள் எல்லையில் செய்வதறியாது எல்லை சோதனைச் சாவடி பகுதியில் தவித்து வருகின்றனர். இது தொடர்பாக முறையான விளக்கம் எதுவும் பாகிஸ்தான் தரப்பில் இதுவரை அளிக்கப்படவில்லை. இந்தியாவில் இருந்து பாகிஸ்தானியர்கள் வெளியேற இந்திய அரசு அவகாசம் அளித்து, அந்த மக்களுக்கு சற்றே நிம்மதியை ஏற்படுத்த நிலையில், பாகிஸ்தானின் எல்லை சோதனைச் சாவடி கதவு மூடல் என்பது பாகிஸ்தானியர்களுக்கு பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் உள்ள பஹல்காம் பகுதியில் கடந்த தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 26 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து பாகிஸ்தானியர்களுக்கு வழங்கப்பட்ட 14 வகையான விசாக்களை மத்திய அரசு ரத்து செய்தது. பாகிஸ்தானும் இதே நடவடிக்கையை கையில் எடுத்தது. இதனால் பாகிஸ்தானில் உள்ள இந்தியர்களும், இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்களும் தங்கள் தாய்நாட்டுக்கு திரும்பி வருகின்றனர். பஞ்சாப் மாநிலம் அமிர்தரஸில் உள்ள வாகா - அட்டாரி சோதனைச் சாவடி வழியாக வெளியேறி வருகின்றனர்.

இதுவரை 1,617 இந்தியர்கள் பாகிஸ்தான் இருந்தும், 224 பாகிஸ்தானியர்கள் இந்தியாவில் இருந்தும் தங்கள் தாயகத்துக்கு திரும்பி உள்ளனர். சார்க் விசா, மருத்துவ சிகிச்சைக்கான விசா, சுற்றுலா விசா மற்றும் பிற விசாக்கள் என அனைத்தையும் இரு நாடுகளும் ரத்து செய்துள்ளன. இதன் காரணமாக இந்தியர்களை திருமணம் செய்த பாகிஸ்தானை சேர்ந்தவர்கள், தங்கள் குடும்பத்தை விட்டு பிரிய வேண்டிய நிர்பந்தமும் எழுந்துள்ளது.

கடந்த புதன்கிழமை மட்டும் 15 இந்தியர்கள் மற்றும் 100 இற்கும் மேற்பட்ட பாகிஸ்தானியர்களும் நாடு திரும்பினர். இந்நிலையில், வியாழக்கிழமை அன்று எல்லை கதவுகளை முற்றிலுமாக பாகிஸ்தான் அடைத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இதனால் அந்த நாட்டு மக்களே தாயகம் திரும்ப முடியாமல் அட்டாரி - வாகா எல்லையில் தவித்து வருகின்றனர்.


முன்னதாக, இந்தியாவில் இருந்து பாகிஸ்தானியர்கள் வெளியேறுவதற்கான கால அவகாசத்தை மறு திகதி குறிப்பிடாமல் மத்திய அரசு நேற்று நீட்டித்தது. இதுகுறித்து உள்துறை அமைச்சகம் பிறப்பித்துள்ள உத்தரவில், “அட்டாரியில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி வழியாக பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தை உடனடியாக நிறுத்த கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி உத்தரவிடப்பட்டது.

உரிய அனுமதி பெற்று இந்தியா வந்தவர்கள், இவ்வழியே மே 1 ஆம் திகதிக்கு முன் பாகிஸ்தான் திரும்ப வேண்டும் என உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவு மறு ஆய்வு செய்யப்பட்டு பகுதி அளவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை பாகிஸ்தான் குடிமக்கள் அட்டாரி சோதனை சாவடி வழியாக இந்தியாவை விட்டு வெளியேற அனுமதி அளிக்கப்படுகிறது.” என்று கூறப்பட்டுள்ளது.

# தஹாவூர் ராணாவிடம் குரல், கையெழுத்து மாதிரிகளை சேகரிக்க நீதிமன்றம் அனுமதி

மும்பை தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதி தஹாவூர் ராணாவிடம் குரல் மற்றும் கையெழுத்து மாதிரியை சேகரிக்க தேசிய புலானாய்வு முகமைக்கு டில்லி நீதிமன்றம் அனுமதி வழங்கி உள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் மும்பை ரயில் நிலையம் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களில் தாக்குதல் நடத்தினர். இதில் வெளிநாட்டினர் உட்பட 166 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலில் ஈடுபட்ட 10 பேரில் 9 தீவிரவாதிகளும் உயிரிழந்தனர்.



உயிருடன் பிடிபட்ட ஒருவருக்குதூக்கு தண்டனை நிறைவேற்றப் பட்டது.

இந்த வழக்கில் தொடர்புடைய பாகிஸ்தான் தீவிரவாதி தஹாவூர் ராணா அமெரிக்காவிலிருந்து கடந்த மாதம் அழைத்துவரப்பட்டார். அவரிடம் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராணாவின் தேசிய புலானாய்வு முகமை காவலை மேலும் 12 நாள்களுக்கு நீட்டித்து, சிறப்பு நீதிமன்ற நீதிபதி சந்தர்ஜித் சிங் ஏப்ரல் 28 ஆம் திகதி உத்தரவிட்டார். இந்நிலையில், ராணாவின் குரல் மற்றும் கையெழுத்து மாதிரியை சேகரிக்க தேசிய புலானாய்வு முகமை சார்பில் சிறப்பு நீதிமன்றத்தில் அனுமதி கோரப்பட்டது. இதற்கு அனுமதி அளித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# பஹல்காம் தீவிரவாத தாக்குதல் தொடர்பாக இந்தியாவுடன் பேச்சில் ஈடுபட வேண்டும்

## பாகிஸ்தான் பிரதமருக்கு அமெரிக்கா அறிவுரை

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் தொடர்பாக இந்தியாவுடன் நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீபுக்கு அமெரிக்கா அறிவுரை வழங்கி உள்ளது.

கடந்த 22 ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இதன் காரணமாக இந்தியா, பாகிஸ் தான் இடையே போர் பதற்றம் எழுந் திருக்கிறது.

இந்தியாவுடன் நேரடி மோதலை தவிர்க்க அமெரிக்காவின் உதவியை பாகிஸ்தான் அரசு நாடியிருப்பதாக கூறப்படுகிறது. இந்த சூழலில் அமெ ரிக்க வெளியுறவுதுறை அமைச்சர் மார்கோ ரூபியோ மத்திய வெளியுற வுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருடன் நேற்று முன்தினம் தொலைபேசியில் பேசினார். அப்போது, 'பஹல்காம் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்ததற்கு அமைச்சர் மார்கோ ரூபியோ ஆழ்ந்த இரங்கல் தெரிவித் துள்ளார்.

தீவிரவாதத்துக்கு எதிரான இந்தி



யாவின் போருக்கு அமெரிக்கா துணை நிற்கும் என்று அவர் உறுதி அளித்துள்ளார். தாக்குதலுக்கு கார ணமான தீவிரவாதிகளை நீதியின் முன்பு நிறுத்த வேண்டும். அதேநேரம் இந்தியாவும், பாகிஸ்தானும் பதற் றத்தை தணிக்க வேண்டும்' என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் உடனும் அமெரிக்க அமைச்சர் மார்கோ ரூபியோ தொலைபேசியில் பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

"பஹல்காம் தாக்குதல் தொடர் பான இந்தியாவின் விசாரணைக்கு பாகிஸ்தான் அரசு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பதற்றத்தை தணிக்கும் நடவடிக்கைகளில் பாகிஸ் தான் அரசு ஈடுபட வேண்டும். குறிப் பாக இந்தியாவுடன் நேரடி பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்" என்று அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தி தொடர் பாளர் டாமி புரூஸ் செய்தியாளர் களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"இரு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களுடன் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தி யாவும் பாகிஸ்தானும் பதற்றத்தை தணிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தி உள்ளார்.குறிப்பாக இரு நாடுகளும் நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று அவர் வலியு றுத்தினார். அமெரிக்காவின் பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகளும் இந்தியா, பாகிஸ்தான் அதிகாரிக ளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இருதரப்புக்கு இடையே சமரசத்தை ஏற்படுத்த அமெரிக்கா தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது." என்றார்.





# உலகின் மிக வயதான நபராக மாறினார் இங்கிலாந்து பெண்

உலகின் மிகவும் வயதான நபர் ஒன்ற பெருமைய இங்கிலாந்தைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது 115 வயது மற்றும் 252 நாள்களில் பெற் றுள்ளார்.

அதன்படி, சர்ரேயின் லைட்வாட் டரில் உள்ள ஒரு பராமரிப்பு இல்லத் தில் வசிக்கும் எதெல் கேட்டர்ஹாம, நேற்று புதன்கிழமை 116 ஆவது வயதில் உயிரிழந்த பிரேசிலிய கன்னி யாஸ்திரியான இனா கனபரோ லூகா ஸின் மரணத்தைத் தொடர்ந்து இந்த மைல்கல்லை எட்டினார்.

இந்தப் புதிய சாதனையை கின் னஸ் உலக சாதனைகள் மற்றும் உலகின் வயதான மக்களின் தரவுத்த ளமான லாங்கிவிகுவெஸ்ட் உறுதிப் படுத்தியுள்ளன.

எதெல் கேட்டர்ஹாம் 1909 ஓகஸ்ட் 21 அன்று ஹாம்ப்ஷயரில் உள்ள ஒரு கிராமத்தில் எட்டு குழந்தைகளில் இரண்டாவது இளையவராகப் பிறந் தார்.

அவர் தற்போது தெற்கு இங்கிலாந் தின் சர்ரேயில் அமைந்துள்ள ஒரு பராமரிப்பு இல்லத்தில் வசித்து வருகிறார்.

அவரது கணவர் மற்றும் அவரது இரண்டு மகள்களையும் விட நீண்ட காலம் உயிர் பிழைத்துள்ளார்.

அவரது சகோதரிகளில் ஒருவரான கிளாடிஸ் 104 வயது வரை வாழ்ந் துள்ளார்.

டைட்டானிக் கப்பல் மூழ்கியது, முதலாம் உலகப் போர், ரஷ்யப் புரட்சி, பெரும் பொருளாதார மந்த நிலை மற்றும் இரண்டாம் உலகப் போர் ஆகியவற்றை கேட்டர்ஹாம் கடந்து வந்துள்ளார்.

கனடா முரசு
வெள்ளிக்கிழமை 02/05/2025

**கனடா அமெரிக்க எல்லையில் போதைப்பொருள் சிக்கியது**

கனடாவுக்குள்ளிருந்து அமெரிக்காவுக்கு போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத புலம்பெயர்ந்தோர் நுழைவதாலேயே கனடா மீது தான் வரிகள் விதிப்பதாக அமெரிக்க 02




# கனடா பொதுத் தேர்தலில் சீக்கியர்கள் 22 பேர் வெற்றி

**கனடாவில் அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் சீக்கியர்கள் 22 பேர் வெற்றி பெற்றுள்ளனர். லிபரல் மற்றும் கொன்சர்வேட்டிவ் கட்சிகள் சார்பில் அவர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.**

**பிராம்ப்டன் வடக்கு தொகுதியில் லிபரல் கட்சியை சேர்ந்த ரூபி சகோட்டா, பிராம்ப்டன் கிழக்கு தொகுதியில் சுக்தீப் கங் உள்ளிட்டோர் வெற்றி பெற்றுள்ளனர்.**

இவர்களை தவிர்த்து அமைச்சராக இருந்த அனிதா ஆனந்த், அஞ்சு தில்லான், சுக் தலிவால், ரன்தீப் சராய், பாரம் பெயின்ஸ் ஆகியோர் லிபரல் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிக் கனியை பறித்தனர்.

கொன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜஸ்ராஜ் ஹலான், தல்விந்தர் ஹில், அமன்ப்ரீத் கில், அர்பன் கன்னா, டிம் உப்பால், பரம் கில், சுக்மன் கில், ஜக்சரண் சிங் மற்றும் ஹர்ப் கில் உள்ளிட்ட சீக்கியர்களும் வெற்றி பெற்று உள்ளனர்.

இந்த தேர்தலில் மார்க் கார்னி தலைமையிலான ஆளும் லிபரல் கட்சி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை தக்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பல பெற்றோர் குடும்பங்களுக்கு கியூபெக் மாகாணத்தில் அங்கீகாரம்



கனடாவின் கியூபெக் மாகாணத்தில் முக்கிய தீர்ப்பு ஒன்றை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

அதில், மூன்று பெற்றோர்களுடன் பிறக்கும் குழந்தைகளுக்கும் இரு பெற்றோர்கள் கொண்ட குடும்பங்களைப் போன்று முழுமையான சட்ட அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மூன்று வகையான பல் பெற்றோர் (multi-parent) குடும்பங்களால் முன்வைக்கப்பட்டது:

01. ஒரு throuple (மூன்று நபர்கள் கொண்ட காதல் உறவு) - ஒரு ஆண், இரண்டு பெண்கள், இணைந்து நான்கு குழந்தைகளை வளர்த்துவருகின்றனர்.

02. ஒரு லெஸ்பியன் ஜோடி மற்றும் அவர்களது நண்பனான ஒரு ஆண், சேர்ந்து ஒரே குழந்தையை வளர்க்க முன்வந்தனர்.

03. ஒரு பெண் குழந்தை பெற இயலாத நிலை காரணமாக, அவரது கணவர் மற்றொரு பெண்ணுடன் குழந்தை பெற்றுள்ளார், ஆனால் அந்தப் பெண்ணும் தனது தாய்மை உரிமையை விரும்புகிறார்.

இந்த மூன்று சம்பவங்களிலும், குழந்தையை உருவாக்கும் முன்பே பெற்றோர் அனைவரும் திட்டமிட்டதாக நீதிமன்றம் வலியுறுத்தியது. பிறகு திருமணம் செய்துபெற்ற விதவைகள் அல்லது மாற்றுத் தந்தைகள் இந்த தீர்வில் உள்ளடங்கவில்லை.

தற்போது கியூபெக் அரசு தங்களது சிவில் சட்டத்தை மாற்ற 12 மாதங்கள் நேரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெற்றோர் உரிமை, குழந்தைகளின் நலன், மரபுரிமை, பாதுகாப்பு மற்றும் சட்ட நலன்கள் விரிவுபடுத்தப்படும்.

ஒன்ராறியோ மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலங்களில் இது ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

இந்நீதிமன்ற தீர்ப்பு, சம கால குடும்ப அமைப்புகளுக்கு ஏற்ப சட்டங்களை நேர்த்தியாக மாற்றும் கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது.



## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ட்ரம்ப் கூறியிருந்தார் .

அவரது கூற்றில் உண்மை உள்ளதோ என எண்ணும் வகையிலான சம்பவங்கள் சில சமீபத்தில் நிகழ்ந்துள்ளன.

கனடாவின் ஒன்ராறியோவிலுள்ள வின்ட்சர் நகரையும், அமெரிக்காவிலுள்ள டெட்ராய்ட் நகரையும் இணைக்கும் டெட்ராய்ட் -வின்ட்சர் சுரங்கப்பாதை அல்லது டெட்ராய்ட்-கனடா சுரங்கப் பாதையில் அமெரிக்க சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி, வாகன சோதனையில் அவர்கள் ஈடுபட்டிருந்தபோது ட்ரக் ஒன்றின் பின் பக்கத்தில் சுமார் 90 கிலோ எடையுள்ள வெள்ளை நிற பவுடர் அடங்கிய பைகள் கிடைத்துள்ளன.

ஆய்வக சோதனையில், அது கொக்கைன் என்னும் போதைப்பொருள் என தெரியவந்துள்ளது. அதன் மதிப்பு சுமார் 3 மில்லியன் டொலர்கள் ஆகும். அந்த வாகனத்தை ஓட்டிய கனேடியரை அதிகாரிகள் கைது செய்துள்ளார்கள்.

அவர் மீது போதைப்பொருள் விநியோகம் தொடர்பில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அந்த போதைப்பொருளுக்கும் தனக்கும் தொடர்பில்லை என்றும், அது குறித்து தனக்குத் தெரியாது என்றும் அந்த கனேடியர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதத்தில் மட்டுமே இந்த பாதையில் போதைப்பொருள் சிக்குவது இது மூன்றாவது முறையாகும்.

# ஒன்டாரியோவின் பட்ஜெட் 15 ஆம் திகதி சமர்ப்பிப்பு



ஒன்டாரியோ மாகாண வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதியன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என மாகாண நிதியமைச்சர் பீட்டர் பெத்லென்பால்வி உறுதிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவுடனான வர்த்தக பதற்றங்களுக்கிடையில் ஒன்டாரியோவை பாதுகாக்க வேண்டிய அனைத்தையும் அரசு செய்யத் தயார் என அவர் தெரிவித்தார்.

வர்த்தகச் சுதந்திரத்தை நாடு முழுவதும் உருவாக்கும் திட்டமொன்று தேவை எனவும், மே 15 அன்று, அந்த திட்டத்தை மாகாண வரவு செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வர்த்தக அழுத்தங்களுக்கு எதிராக 22 பில்லியன் டொலர் மதிப்பிலான கட்டமைப்புத் திட்ட முதலீட்டை மேற்கொள்வதாக மாகாண முதல்வர் டக் போர்ட் வாக்குறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

கனடா மீது அமெரிக்கா வரி விதிப்பதாக அறிவித்ததன் பின்னர் சமர்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.




# டொரோண்டோவில் 10 ஆவது மாடியில் இருந்து விழுந்த குழந்தை மருத்துவமனையில் அனுமதி

டொரோண்டோவில் உள்ள நோர்த் யோர்க் North York பகுதியில் 10 ஆவது மாடியிலிருந்து விழுந்த குழந்தை உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஜேன் வீதி Jane Street இல் அமைந்துள்ள 2801ஆம் இலக்க குடியிருப்பு கட்டடத்துக்கு அருகிலுள்ள டிரிப்ட்வுட் Driftwood Avenue க்கு கிழக்கே சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தை வீழ்ந்து கடுமையாக காயமடைந்த நிலையில் விரைவில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், குழந்தையின் நிலைமை மிகவும் சிக்கலானது எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்த விபத்தில் தற்போது எந்தவொரு குற்றச்செயல் தொடர்பும் இருப்பதற்கான சாட்சியங்கள் இல்லை எனவும், இது ஒரு விபத்து எனவே தெரிகிறது எனவும் டொரோன்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.